3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு.தி. சரவணன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

201—

அணையைப் புனரமைத்தல்

***50707—திரு. பெ.சு.தி. சரவணன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் ஒன்றியம், மிருகண்டா நதி அணையைப் புனரமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கலசப்பாக்கம் வட்டம், கலசப்பாக்கம் ஒன்றியத்தில் உள்ள மிருகண்டா நதி அணையைச் சீரமைக்க உலக வங்கி நிதியுதவியுடன் அணை புனரமைப்புத் திட்டத்தில் பணிகள் மேற்கொள்ள, அணையின் நீரியியல் விவரங்கள் மத்திய நீர்வளத் துறையின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், அணையினுடைய பாதுகாப்புக்கு என்ன வழி செய்யலாம் என்பது தொடர்பான Dam Safety Review Panel*–ன் ஆய்வறிக்கை அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.* Report *வந்த பிறகு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள்.*

திரு. பெ.சு.தி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்போது பொதுப் பணித்*

துறை அமைச்சராக இருந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது துணை முதல்வராக இருந்து 10–2–2010 அன்று திறந்து வைத்த மிருகண்டா நதி அணை, 10 ஆண்டுகளாக எந்தவித பராமரிப்புமின்றி சிதிலமடைந்து உள்ளது. கலைஞர் அறிவித்த அந்த அணையை கலைஞருடைய நூற்றாண்டான இந்த ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சீரமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணையை முழுமையாகப் பழுது பார்ப்பதற்காகத்தான், உலக வங்கி நிதிக்காக நாங்கள் report அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னேன். Dam–ஐ பலப்படுத்துவதற்காகத்தான் Dam Safety Review Panel மூலமும் அவர்களுக்கு ஆய்வு அறிக்கையைக் கொடுத்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், 10 ஆண்டுகளாக சொல்கிறீர்கள். 10 ஆண்டுகளில் மிருகண்டா அணையின் கீழுள்ள நல்லான்பிள்ளைபெற்றான் அணை, கங்கலமாதேவி–1 அணை, காந்தபாளையம் அணை, கேட்டவரம்பாளையம் அணை, கங்கலமாதேவி–2 அணை, சிறுவள்ளூர் பிள்ளையார் கோவில் அணை, சிறுவள்ளூர் காலனி அணை, வில்வாரணி அணை, அம்மாபுரம் அணை, மேல்சோழங்குப்பம் அணை ஆகிய 10 அணைகளுக்கும் 4 கோடி ரூபாய் ஒதுக்கி புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு.தி. சரவணன் அவர்கள்.

திரு. பெ.சு.தி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்து தீட்டிய திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரமாக விளங்கும் நந்தன் கால்வாய்த் திட்டத்தினை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 100–வது பிறந்த நாள் ஆண்டான இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுத்துவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நந்தன் கால்வாய்த் திட்டம் நீண்ட நெடுங்காலமாக கோரிக்கையாகக் கேட்டுக்கொண்டிருக்கிற ஒரு திட்டம். நான் பொதுப் பணித் துறை அமைச்சராக 1989–ல் பணியாற்றியபோது தலைவர் அவர்கள் இத்திட்டம் குறித்து என்னிடத்திலே சொன்னார்கள். இந்தத் திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டு ரூ.35 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி போதவில்லை. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். அதற்கு நிதி கேட்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடாக ரூ.309 கோடி நிதி தேவை என்று* report *கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்று நானும் நினைக்கிறேன். காரணம், மறைந்த அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் பலமுறை இம்மாமன்றத்தில் அதைப் பற்றி பேசியிருக்கிறார்கள். கடந்த வாரம்* Collectors' Conference *நடைபெற்றபோதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'நந்தன் கால்வாய்த் திட்டப் பணி எந்தளவில் இருக்கிறது?' என்ற சிறு குறிப்பினை எழுதி என்னிடத்தில் காட்டினார்கள். நான் 'அதற்காக நிதியொதுக்கம் கேட்டிருக்கிறோம்' என்று தெரிவித்தேன். எனவே, அத்திட்டத்தை* implement *செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக இவ்வாண்டு நிதியைத் தருவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–10

4. அறிவிப்புகள்

(அ) ஆஸ்திரேலியா நாடாளுமன்றக் குழுவினர் பேரவையில் உள்ள முக்கியப் பிரமுகர்களுக்கான பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து அவை நடவடிக்கைகளைப் பார்வையிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஆஸ்திரேலியா நாடாளுமன்றத் தலைவர் மாண்புமிகு திரு. மில்டன் டிக் அவர்கள் தலைமையிலான நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் தற்போது பேரவையிலுள்ள முக்கியப் பிரமுகர்களுக்கான பார்வையாளர்கள் மாடங்களிலிருந்து நமது*

அவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் சார்பாகவும், அவை உறுப்பினர்களின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும் நான் அவர்களை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

I am pleased to inform that Australian Parliamentary Delegation under the Chairmanship of Hon'ble Speaker Thiru. Milton Dick is now witnessing the proceedings of our Assembly from VIP galleries. On behalf of our Hon'ble Chief Minister Thiru M.K. Stalin, Members of Legislative Assembly and the people of Tamil Nadu, I extend a hearty welcome to them. (Thumping of desks)

3. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

உடுக்குறியிட்ட வினாக்கள்-*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலிருந்து மேல்புறக் கால்வாய் அமைத்து செங்கம், கலசப்பாக்கம், திருவண்ணாமலை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 23 ஏரிகளை நிரப்புகின்ற திட்டம், இந்தத் திட்டம். ஏற்கெனவே விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சுமார் ரூ.269 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்த்த நிலையில், அந்தத் திட்டம் நிலுவையில் உள்ளது. அந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நிறைவேற்றுவார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Dam Safety Review Panel *மூலம் சாத்தனூர் அணையைப் புனரமைப்பு செய்வதற்கும், அங்குள்ள* parks-*ஐ நல்லமுறையில் பராமரிப்பதற்கும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தத் திட்டம் வருகிற நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.*

2023 அக்டோபர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் ஆட்சி இருந்தபோது, விவசாயிகளின் 60 ஆண்டு காலக் கனவுத் திட்டமான, அத்திக்கடவு-அவினாசி திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் ரூ.1,652 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 80 சதவிகிதப் பணிகள் அந்த ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. தற்போது, அத்திட்டப் பணிகள் 99 சதவிகிதம் முடிவடைந்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மக்களுக்குப் பயனளிக்கின்ற வகையில் அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திக்கடவு-அவினாசி திட்டத்தைத் துவக்குகிற அளவிற்கு எல்லா பணிகளும் முடிவடைந்துள்ளன. ஆனால், அந்தத் திட்டத்திற்குக் காளிங்கராயன் அணையிலிருந்து 1.50* tmc *தண்ணீர்* pump *செய்யப்பட்டு, அதன்மூலமாகத்தான் கொண்டு போகவேண்டியிருக்கிறது. இப்போது தண்ணீர் இல்லை. ஆகையினால், காளிங்கராயன் அணையில் தண்ணீர் வந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அத்திட்டத்திற்கான துவக்க விழாவை நடத்துவார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் செயல்படுத்தப்படும் நந்தன் கால்வாய்த் திட்டத்திற்கான கருத்துரு—தென்பெண்ணை-செய்யாறு ஆகியவற்றை இணைத்து, அதனை நந்தன் கால்வாயோடு இணைக்கும் திட்டம்—தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில் உலக வங்கிக்கு அனுப்பப்பட்டு, 15 ஆண்டு காலமாகியிருக்கிறது.*

அத்திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் அதாவது, நந்தன் கால்வாயோடு இணைக்கின்ற திட்டம், எப்போது நிறைவேற்றப்படும் என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோல, சாத்தனூர் அணை போன்ற பல்வேறு அணைகளிலுள்ள பூங்காக்களை, M.G.M. மற்றும் V.G.P. போன்ற தனியார் நிறுவனங்களின் பங்களிப்போடு பொழுதுபோக்குப் பூங்காக்களைப்போல, அனைத்து அணைகளிலும் பூங்காக்களை ஏற்படுத்தி, அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவர அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் குறிப்பிட்டுள்ள இத்திட்டம் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது அறிவித்த திட்டமாகும். 63 திட்டங்களில் 2 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. ஆனால், இத்திட்டம் மட்டும் 10 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் தவறுதலாக விடுபட்டுபோய்விட்டது. இத்திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் துறைமூலமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். Dam இருக்கின்ற இடங்களில் பூங்காக்களை அமைப்பது, பராமரிப்பு செய்வது ஆகிய பணிகளை அரசே எடுத்து செய்வதா அல்லது அவற்றை செய்யும் கம்பெனிகளுக்கு விடுவதா என்பது குறித்து அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, ஒன்று அரசே அப்பணிகளை மேற்கொள்ளும் அல்லது அப்பணிகளை மேற்கொள்ளக்கூடிய கம்பெனிகளுக்கு அந்தப் பணிகள் ஒப்படைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியில், V.K. புதூர் தாலுகா, ரெட்டைகுளம் ஊத்துமலை பெரியகுளம் கரையிலுள்ள புதிய இணைப்புக் கால்வாய்த் திட்டப் பணியை விரைந்து

2023 அக்டோபர் 9]
தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது எழுப்பிய கேள்வியினை என்னிடத்தில் எழுத்து மூலமாகக் கொடுத்தால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.*

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதியில் அமையப் பெற்றுள்ள ஆனைக்குட்டை நீர்த்தேக்கம் விவசாயிகளுக்குப் பயன்படக்கூடிய நீர்த்தேக்கமாகவும், விருதுநகர் நகராட்சி மக்களின் குடிநீருக்குத் தேவைபடக்கூடிய நீர்த்தேக்கமாகவும் உள்ளது. அந்த அணை கட்டிய நாளிலிருந்து அங்கு நீரைத் தேக்க முடியாமல், இரண்டு நாட்களிலேயே நீர் வெளியேறிவிடுகிறது. அதிலுள்ள* shutters–*கதவணைகள் அனைத்தும் பழுதடைந்திருக்கின்ற காரணத்தால், அவற்றை மாற்றிக் கொடுத்தால் விவசாயத்திற்கும், மக்களின் குடிநீருக்கும் பயனுள்ளதாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றைச் சரிசெய்து கொடுக்க ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் திட்டத்திற்கான வழிமுறைகள் சாத்தியப்படுமா என்பதைத் துறை மூலமாக ஆய்ந்து, கேட்டு, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*